**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 417** **நாள் : 04.12.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டிட்வா புயல் மழையினை முன்னிட்டு 17.10.2025 முதல் இன்று (04.12.2025) வரை 3,222 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1,31,582 நபர்கள் பயனடைந்துள்ளனர்.**

**நாளை (05.12.2025) 170 இடங்களில் மழைக்கால சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.**

டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அனைத்து மண்டலங்களிலும் வார்டு வாரியாக நாள்தோறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டிட்வா புயல் மழையினை முன்னிட்டு 17.10.2025 முதல் இன்று (04.12.2025) வரை 3,222 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1,31,582 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த மருத்துவ முகாம்களில் மழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல், சளி, இருமல், சேற்றுப்புண், தோல் அழற்சி உள்ளிட்ட நோய்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. இந்த மருத்துவ முகாம்களில் ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள், மருத்துவ உதவியாளர் உள்ளிட்ட நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், நாளை (05.12.2025) 170 இடங்களில் மழைக்கால சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**